367

மாதர் போதினி

No. 263 டிசம்பர் 1919 No. 12

A CALL TO JOIN THE GREAT COMMISSION PRAYER LEAGUE

மகாகட்டளையை நிறைவேற்றும் ஐக்ய ஜெபசேனையைச் சேர ஓர் அழைப்பு

மாற்கு 16: 15-ல் நமது ஆண்டவர் கடைசியாய்க் கொடுத்த மகா கட்டளையைப் பார்க்கலாம். 'நீங்கள் உலகமெங்கும் போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்பதே அந்தப் பிரதான கட்டளை. இழந்துபோன உலகத்தை தேவனுக்காகத் தேடிச் செல்லுமுன், இழந்துபோன உலகத்துக்காகத் தேவனைத் தேடவேண்டியது அவசியம். சகல ஊழியத்திலும் மேன்மையான ஊழியம் பரிந்து பேசும் ஜெபஊழியமே. ஜெபமே ஜெயம். ஜெபமின்றிச் செய்யும் சகல ஊழியமும் அபத்தமாகும். இதினால் ஜெபத்தின் மேன்மையையும் முக்கியத்தையுங் காணலாம்.

உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. அநேக சபைகளிலும் தனிக்கிறிஸ்தவர்களிலும் உயிரில்லை. இதிலுங் கேவலமாய் அநேகர் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். பலவிதமான தப்பறையான கொள்கைகளைப் பலவிடங்களிலுங் காண்கிறோம். தாங்களறிந்த ஆண்டவரை கண்கூடாய்க்கிடைக்கும் அற்ப லாபத்திற்காக மறுதலிப்போர் பலர். மாம்சத்தில் வந்த கிறிஸ்துவை அறிக்கை செய்யாத அந்திக்கிறிஸ்துபோன்றவர் பலருண்டு. ஆத்துமாவை ஒப்புக்கொடுக்கிறதாகச் சொன்னாலும் சரீரத்தை ஒப்புக்கொடாத பலருண்டு. சரீரத்தை ஜீவபலியாக தேவனுக்குக் கொடுக்கவேண்டுமென்பதை நிறைவேற்றாத பலருண்டு. நாளுக்கு நாள் விசுவாசத்திலிருந்து வழுவுகிறவர் அநேகர். 'மனுஷகுமாரன் வரும்போது பூமியில் விசுவாசத்தைக் காண்பாரோ' வென்று அஞ்சவேண்டியிருக்கிறது.

இன்னும் ஓர் வகையாய்ப் பார்த்தால், நாளுக்குநாள் பரிசுத்தமாகிக்கொண்டே போகும் தேவனுடைய பிள்ளைகளைக் காணலாம்.

ஜெபஜீவியஞ் செய்வதால் ஜெபஜீவியத்தில் வளரும் அநேக தேவனுடைய பிள்ளைகள் அங்கங்கு இருக்கிறார்கள். 'அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ சீக்கிரமாய் வருகிறேன்' என்ற ஆண்டவர் வருகை சமீபித்திருக்கிறதாகத் தோன்றுகிறது.

அநேக உத்தம தேவனுடைய பிள்ளைகள் தேவனோடு தனித்திருப்பதால், ஆண்டவர் சீக்கிரத்தில் ஓர் மகா எழுப்புதலை உலகமெங்கும் அனுப்புவார், அல்லது அவர் தாமே சீக்கிரத்தில் வந்துவிடுவார் என்று கூறுகிறார்கள். இதை வாசிக்கும் சகோதரியே, 'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்று உண்மையாய் ஊக்கத்தோடு ஜெபிக்கிறாயா?

இவ்வித எழுப்புதலுண்டாக ஊக்கமாய் ஜெபிக்க பதினையாயிரம் பேர் சேர்ந்த அல்லது அநேகமடங்கு 15000 பேர் சேர்ந்த ஜெப ஐக்யசேனை சேர்ந்தால் நல்லது என்று இந்த அழைப்பு நமக்கு வருகிறது. இந்த ஜெப ஐக்ய சேனையிற் சேரப் பிரியமானவர் எவரானாலுஞ் சேரலாம். அப்படிச் சேர விரும்புவோர் ஆண்டவர் சமுகத்தில் தங்கள் பெயரைத் தெரியப்படுத்தி, பிரதிதினமும் காலையில் 6 மணி முதல் 6-30 மணி வரை தேவ சமுகத்தில் தரித்து பரிந்து ஜெபிக்க வேண்டிக்கொள்ளுகிறோம். காலை வசதிப்படாதவர் மதியம் 12 மணி முதல் 12-30 வரை ஜெபிக்கலாம். தினந்தோறும் குறைந்தபட்சம் அரைமணி நேரமாவது பரிந்து பேசும் ஊழியத்தில் செலவிடுவது நல்லது. குறைந்தது 30 நாட்களாய்த் தவறாமல் ஒழுங்காய் ஜெபிக்கக் கேட்கிறோம். அதற்கு மேற்படவும் ஜெபித்து வரலாம். இது ஓர் பெரிய சிலாக்கியம்; உன்னத அழைப்பு. அநேக தேவனுடைய பிள்ளைகள் பரிந்து பேசுங் கிறிஸ்துவோடு சேர்ந்து ஐக்யசேனையாய் ஜெபிப்பதால் இந்தப் பேருஞ் சிலாக்கியத்தை இழந்துவிடாமல் பெற்று அனுபவிப்பது மகா பாக்கியமாகும்.

THE GUIDING HAND

உனது வழிகாட்டி யெது?

நமது சக்கரவர்த்தியின் இருப்பிடமாகிய லண்டன் நகரில் முன்னொருமுறை கிறிஸ்தவ பக்தியிற் சிறந்துவிளங்கிய ரூவி என்னும் ஓர் வயோதிப துரைசானி வசித்தனள். பிறரை உபசரிப்பதில் வீதியாளுக் கொப்பான அம்மாது, பிராட்பெரி என்னும் கிறிஸ்தவ நண்பன் ஒருவனையும், தீமோத்தேயு ரோஜேர்ஸ் என்னும் இன்னொரு வாலிபனையும் தனது வீட்டிற்குப் பகற்போசனம் அருந்தும்

படி அழைத்திருந்தாள். அத்தருணத்தில் அந்த வாலிபன் தான் ஓர் வேதப்புரட்டனுடைய மகன் என்றும், தனது தகப்பன் ஒரு முறை சிறைச்சாலைத் தீர்ப்பினின்று ஆச்சரியமான விதமாய் விலக்கப்பட்ட சம்பவத்தையுங் குறித்துச் சம்பாஷித்தான். அது பின்வருமாறு:

இவ்வாலிபனின் தகப்பனாகிய ரோஜேர்ஸ் என்பவன் 1662-ம் ஆண்டில் இருந்த மார்க்க விரோதிகளுள் ஒருவன். அந்நாட்களில் அவ்விடமிருந்த சேர் றிச்சேட் என்னும் நீதிபதி மார்க்க புரட்டருக்குக் கடுந்தீர்ப்பிட விரும்பினபடியால் ரோஜேர்ஸைத் தண்டிப்பதற்கு வெகு ஆவலாயிருந்தான். தப்பிதமான போதனையைப் போதிப்பதாய் ஒருநாள் நீதிபதி கேள்விப்பட்டு உடனே அவ்விடத்திற்கு தன்னுடைய இரு வேவுகாரரை அனுப்பினார். அவ்விருவரும் அங்குசென்று, அப்பிரசங்கத்திற்குச் செவிகொடுத்தோரின் நாமமுதலாய் அட்டவணைப்படுத்தி, நீதிபதிக்கு ஒப்புவித்தனர். நீதிபதியின் உத்தாரவுப்படி சிறு நிமிஷங்களுள் ரோஜேர்ஸ் என்பவனுடன் அவனுக்குச் செவிசாய்த்த அவனுடைய தோழர்கள் யாவரும் நீதிபதி முன் கொண்டுவரப்பட்டனர். நீதிபதியின் பௌத்திரியான அழகிய ஓர் ஆறு வயதுச் சிறுமியும் அங்கு சமுகமாயிருந்தாள். அச்சிறுமி ரோஜேர்ஸுடைய முகமலர்ச்சியான பார்வையாற் கவரப்பட்டு, அவனண்டை பலமுறை ஓடிப்போனாள். ரோஜேர்ஸும் அச்சிறுமியை வாரியணைத்துத் தன் முழங்கால்களின் மீதிருத்திப் பலதடவை முத்தமிட்டான். இதற்கிடையில் நீதிபதி தான் அவர்களுக்குத் தீர்ப்பிட அது சமயமல்லவென்றும், குறிக்கப்பட்ட பிறிதோர் தேதியில் வரும்படியும் கட்டளையிட்டான். அப்படியே அச்சனத்திரள் கலைந்தது.

அவர்கள் மறுபடி கூடிவருமுன், நீதிபதி, அவர்களுக்குத் தீர்ப்பெழுதி ஆயத்தமாயிருந்தான். ரோஜேர்ஸ் முந்திய நாள் தான் அன்பு பாராட்டிய பாலகியை அன்றையத்தினமும் பார்க்கலாமென்றெண்ணி சில இனிப்புப் பதார்த்தங்களுடன் குறிக்கப்பட்டதேதியில் சிநேகிதர்களையுங் கூட்டிக்கொண்டு நீதிபதியின் இல்லஞ் சென்றான். இவர்களைக் கண்டவுடன், அப்பாலகி ரோஜேர்ஸும் வந்திருப்பானென்றெண்ணி அவர்களிடை சென்று தேடினாள். இப்பாலகியின் பாட்டனான சேர் றிச்சேட் நீதிபதியும் அவளை அதிகமாய் நேசித்தது மாத்திரமல்ல, அப்பிள்ளைக்கு எத்தருணத்தில் என்ன வேண்டியதோ அதை வாங்கிக்கொடுப்பது அவனுக்கு வழக்கமாய் இருந்தது. ரோஜேர்ஸ், குழந்தை தன்னிடம் வந்த தருணம்பார்த்து அதைத் தூக்கிவைத்துக்கொண்டு, தான் கொணர்ந்த பதார்த்தங்களை

அதனிடம் கொடுத்தான். அப்பிள்ளை அவற்றைப் புசிக்கையில் றேஜேர்ஸ் பின்வருமாறு பிள்ளையுடன் சம்பாஷித்தான் :

றேஜேர்ஸ் பிள்ளையை நோக்கி : 'உனது பாட்டன் என்னையும் என் சிநேகிதரையும் சிறைச்சாலைக்கு அனுப்ப ஒழுங்குசெய்கிறரே' என்றான். பிள்ளை திகைப்புடன் அவனை உற்று நோக்கி, 'சிறைக்கா! எதற்காக?' என்று வினவினது.

'நான் தகாத ஓர் பிரசங்கஞ் செய்ததற்காகவும், என் தோழர் அதற்குச் செவிகொடுத்ததற்காகவுமே' என்றான் றேஜேர்ஸ். அதற்குப் பிள்ளை : 'ஆனால், பாட்டா உங்களை அனுப்புவாரென்று நான் நம்பவில்லை' என்றது.

'அப்படியல்ல, அவர் அதற்குரிய தீர்ப்புப்பத்திரமும் வரைந்து விட்டார். திர்ப்பிடுவதுதான் தாமதம்' என்றான் றேஜேர்ஸ்.

இதைக் கேட்டதும் அப்பிள்ளை தன் பாட்டனிடம் விரைந்து சென்று, ஒருவரும் பிரவேசிக்கமுடியாத நீதிபதியின் புறம்பான ஆபீஸுக்குட் பிரவேசித்து நீதிபதியை நோக்கி :

'பாட்டா! இங்கே இக்கட்டிடத்துள் இருக்கும் அம்மனிதனையும் அவருடைய தோழரையும் சிறைச்சாலைக்கு நீர் அனுப்புவது மெய்தானா?' என்றாள்.

அதற்கு நீதிபதி, 'உனக்கதனால் யாதுமில்லை. அப்புறம் போ. உன் அலுவலைப் பார்' என்றான். ஆனால் அச்சிறுமி வியாகுலத்துடன், 'நானோ போகமாட்டேன். அவர்களை சிறைச்சாலைக்கனுப்புகில், அவர்கள் நாம அட்டவணையில் என்னையுமிடும். அவர்கள் சிறைக்கூடஞ் சென்றால், உண்மையாகவே நான் அதற்குப் புறம்பானவளல்ல' என்று விடை பகர்ந்தாள். நீதிபதி இவளுடைய துணிகரமான வார்த்தைகளைச் செவியிலேற்றதும், செய்வதென்ன என்பதறியாமற் சற்று யோசித்திருந்து, பின்பு எழும்பி, தீர்ப்புப் பத்திரத்தை ஒரு கரத்திலும், அப்பாலகியை மறுகரத்திலும் பிடித்துக் கொண்டு, கட்டிடத்துட் சென்றான்.

அங்கே நீதிபதி அவர்களை நோக்கி, 'உங்கள் யாவரையும் தீர்ப்பின்படி சிறைக்கனுப்பவேண்டியது. ஆனால் எனது பௌத்திரியாகிய இவளுடைய கேள்விப்படி உங்களை மன்னித்துவிடுகிறேன்' என்றான். அந்நேரத்தில் அவர்களுக்கிருந்த சந்துஷ்டி விஸ்தரிப்புளடங்காது. யாவரும் தம் நன்றி சொல்லித் திரும்புகையில், றேஜேர்ஸ் அப்பிள்ளையிட மோடி அதை முத்தமிட்டுத் தனது இருகரங்களையும் அப்பாலகியின் சிரசின்மேல் வைத்து : 'தேவன் உம்மை ஆசிர்வதிப்பாராக. எங்களுக்காக மத்தியஸ்தஞ் செய்ய எவின ஆண்டவர், இன்றும், உமது ஆயுள்பரியந்தமென்றுங் கூட

இருப்பாராக' என்று சொல்லி அப்பிள்ளையை ஆசீர்வதித்தான்.

மேற் சொல்லப்பட்ட இக்கதையை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த ரூலி துரைசானி, தீமோத்தேயு ரோஜேர்ஸ் என்ற அவ்வாலிபனை நோக்கி, 'நீர்தானு அந்த ரோஜேர்ஸ் என்பவருடைய மகன்?' என்று அவாவுடன் வினவினுள். 'ஆம், நான் அவருடைய மகன்தான்' என்று வாலிபன் உத்தரஞ் சொன்னுன். அந்த அம்மாள் அவனை நோக்கி, 'இவ்வளவு காலமாக நான் உம்முடன் பழக்கமாயிருந்தும் இச்சம்பவத்தை அறிந்திராததுபோல, நானிப்போ சொல்லப்போகுஞ் சங்கதி உமக்கு வெகு விந்தையாயிருக்கும். உமது தகப்பனுர் ஆசீர்வதித்த அந்தப் பெண் பாலகி நான்தான்' என்ருள். இதைக் கேட்டுக்கொண்டு அவ்விடமிருந்த பிராட்பெரி என்னும் வயோதிபனும் வெகு ஆச்சரியப்பட்டு, 'தயவுசெய்து உமது ஜீவிய விருத்தாந்தத்தை நாங்கள் செவி கொடுக்கும்படிக்கு விபரமாய்ச் சொல்லவேண்டும்' என்ருன். (இன்னும் வரும்.)

Isaiah Paul.

GENERAL NOTES

பொதுக் குறிப்புகள்

உணவுப் பொருள்களை அதிகமாக உண்டுபண்ணுதல்

சென்ற இரண்டு வருஷங்களாகப் பருவமழை பெய்யாதிருந்ததால், உணவுப்பொருள்களின் விலை அதிகமாகியிருக்கிறது. இந்த வருஷம் மழைத்தட்டு ஏற்பட்டுவிட்டால் இன்னும் சிரமம் ஏற்படக்கூடும். அதற்காக கவர்ன்மெண்டார், ஜனங்களை சாகுபடி விஷயத்தில் அதிக ஊக்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், மாஸூலை அதிகரிக்கத்தக்க வழிகளைக் கைக்கொள்ளவேண்டுமென்றும் சொல்லி, அதற்காக என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஒரு அறிக்கைப்பத்திரிகை வெளியிட்டிருக்கிருர்கள்.

நமது மாகாணத்தின் மாஸூலை அதிகப்படுத்த மூன்று வழிகள் உண்டென்று கவர்ன்மெண்டார் சொல்லுகிருர்கள். முதலாவது நிலத்தின் கண்டுமுதலை அதிகப்படுத்தல்; இரண்டாவது பூச்சிகளின் உபத்திரவத்தைப் போக்குதல்; மூன்ருவது சாகுபடி செய்யாமல் தரிசாக இருக்கும் நிலங்களில் புதிதாக சாகுபடிசெய்தல்.

கவர்ன்மெண்டார் கூடியமட்டும் பருவமழை பெய்யாமற்போனுலும் நிலங்களைச் சாகுபடிசெய்வதற்கான வேறு வழிகளைத் தெரிந்து அதற்காக நிலங்களில் கிணறுவெட்டிக்கொள்ளுதல் நல்லதென்கிருர்

கள். விடுபட்ட ஜில்லாக்களில் ஜனங்கள் கிணறுவெட்டுவதற்கு ஸௌகர்யங்கள் செய்துகொடுக்கவும் பணம் கடன்கொடுக்கவும் வேண்டி தனி உத்யோகஸ்தர்களை நியமிக்கப்போகிறார்கள். சேலம், வட ஆற்காடு, சித்தூர், மதுரை, திருச்சினாப்பள்ளி, கோதாவரி ஜில்லாக்களில் இதுவிஷயமாக விசேஷ ஏற்பாடுகளும் செய்யப்போகிறார்கள். கிணறு வெட்டும் வேலைகளைச் செய்துகொடுக்க இஞ்ஜினியரிங் விப்பந்திகளையும் ஒவ்வொரு ஜில்லாவிலும் நியமிக்கப்போகிறார்கள்.

கவர்ன்மெண்ட் வ்யவஸாயப் பண்ணைகளில் தெரியவந்துள்ள லாபகரமான வ்யவஸாய முறைகளை துண்டுப்பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறார்கள். அநேக இடங்களில் வ்யவஸாயிகள் அவைகளை அநுஸரித்துப் பயிர் செய்து லாபமடைந்திருக்கிறார்கள். பெரிய மிராசுதார்களும் ஜமீன்தார்களும் அந்த முறைகளை அனுஷ்டித்து ஜனங்களுக்குத் தெரியும்படிசெய்தால், நமது ராஜதானியில் கிடைக்கும் உணவுப்பொருள்களின் அளவு அதிகமாகும்.

பயிர்களில் பூச்சிகள் விழுந்து பயிரை நாசம் செய்யும்போலிருந்தால், அவ்விஷயத்தை வ்யவஸாயிகள் கிராம உத்யோகஸ்தர்களிடம் தெரிவிக்கவேண்டும். அவர்கள் தாசில்தாருக்கோ டெபுடி தாசில்தாருக்கோ தெரிவிப்பார்கள். தாசில்தார் பூச்சிபிடித்த செடியையும் பூச்சியையும் மாதிரிக்காக பூச்சிசாஸ்த்ர நிபுணருக்கு அனுப்பி யோசனை கேட்பார்.

புன்செய்ப் பயிர் சாகுபடியை அதிகரிக்க கவர்ன்மெண்டார் பின் வரும் ஸௌகர்யங்களைச் செய்துகொடுத்திருக்கிறார்கள். அவையாவன :

(1) 1327, 1328-ம் பஸலிகளில் சாகுபடி செய்யப்படாத கவர்ன்மெண்ட் புறம்போக்குகளில் புன்செய்ப் பயிர்களைத் தீர்வையில்லாமல் சாகுபடி செய்யலாம்.

(2) 1329-ம் பஸலியில் குளத்தோரத்தில் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு புன்செய்ப் பயிர்கள் சாகுபடிசெய்ய கலெக்டர்கள் அனுமதிகொடுக்கலாம். குளத்தோரங்களில் சாகுபடி செய்கிறவர்களுக்கு குளத்துப்பாசனமுள்ள நன்செய் நிலங்கள் இருக்க வேண்டும். அப்படி சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கு அந்தக் கிராமத்து உயர்தரப் புன்செய்த் தீர்வை விதிக்கப்படும்.

(3) வீட்டுப் புறக்கடைகளில் 25 ஸெண்ட் வரையில் புன்செய்ப் பயிர்களை தீர்வையில்லாமல் சாகுபடி செய்யலாம்.

ரெயில்வேயைச் சேர்ந்த தரிசுநிலங்களில் இந்த ஜூலை மாஸம் முதல் மூன்று வருஷத்துக்குத் தீர்வையில்லாமல் உணவுப்பயிர்களை

சாகுபடி செய்ய விடுவதைப்பற்றி கவர்ன்மெண்டார் ரெயில்வே போர்டுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

கரும்புக்கு எரு

கரும்புக்கு என்ன எரு போடுவது லாபகரமானது என்பதைப் பற்றி திருவாங்கூர் வ்யவசாய இலாகாவில் சிலகாலமாகப் பரீக்ஷை செய்து வந்தார்கள். இதர எருக்கள் ஒன்றும் போடாமல் சாம்பல் எரு மாத்திரம் போட்டால் ஸாதாரணமாக ஒரு எக்கருக்கு 25 டன் கரும்பு கிடைக்கிறதாம். சாம்பல், பிண்ணாக்கு, ப்ரான்ஷெல் என்னும் மீன் உரம் ஆகிய இவைகளைப் போட்டுப்பார்த்ததில் ஏக்கருக்கு 35 டன் கரும்பு கிடைத்ததாம். பிறகு ஐந்து வகை எருக்களைப் போட்டுப் பயிர்செய்து பார்த்தார்கள். ஒவ்வொரு வகை எருவிலும் ஒரு எக்கருக்கு எவ்வளவு வீதம் போட்டார்கள் என்பதையும், மாஸூல், செலவு முதலிய விவரங்களையும் கீழே கொடுக்கிறோம்.

	எருவின் பெயர்	அளவு ராத்தல்	மாஸூல்		வெல்லம் விலை ரூ.	செலவு ரூ.	லாபம் ரூ.
			கரும்பு டன்	வெல்லம் ராத்தல்			
1.	சாம்பல்	7000	16	2990	300	180	120
2.	சாம்பல் ... ... பிண்ணாக்கு ... ... ப்ரான்ஷெல் என்னும் மீன் எரு	2400 1800 600	19	4170	417	200	217
3.	பிண்ணாக்கு ... ... ஸூபர்பாஸ்பேட் ... சிலிதேசத்து பொட்லுப்பு.	2400 220 450	22*	4790	479	255	224
4.	பிண்ணாக்கு ... ... அம்மோனியம் ஸல்பேட்.	2400 340	20*	4730	473	235	238
5.	பிண்ணாக்கு ... ... ஸூபர்பாஸ்பேட் ... அம்மோனியம் ஸல்பேட்.	2400 220 340	25	5340	534	245	289

இதனால் பிண்ணாக்கு, அம்மோனியம் ஸல்பேட், ஸூபர்பாஸ்பேட் ஆகிய இவைகளை எருவாகப் போடுவதே சிறந்ததென்றும்,

அதற்கடுத்தபடியாக மூன்ருவது நான்காவது வகை எருமிச்ரங்களைச் சொல்லலாமென்றும் ஏற்படுகிறது. சாம்பல் எருப்போடுவது லாபகரம் அல்ல.

இலவம் பஞ்சு

சில காலமாக இலவம்பஞ்சுக்கு க்ராக்கி ஏற்பட்டு வருகிறது. முன்பு இலவம்பஞ்சு மெத்தை, தலையணைகளுக்கு அடைப்பதற்கு மாத்திரம் உபயோகப்பட்டுவந்தது. அதனுல் இலவமரத்தைத் தனிப் பயிராக எவரும் சாகுபடி செய்யவில்லை. வேலி ஓரங்களில் மாத்திரம் பயிரிட்டுவந்தார்கள். ஆனுல் தற்போது அது வேறு அநேக வேலைகளுக்கு உபயோகப்படுகிறது. அது உஷ்ணம் தாக்காத பெல்ட் செய்வதற்கும், நெசவுவேலைகளிலும், உயிர்க்கச்சை, உயிர்ச் சட்டை, மிதப்புகள் முதலியவை செய்வதற்கும் அதிகம் உபயோகப் படுகிறது. பிரெஞ்ச், ஜெர்மன் குடியேற்ற நாடுகளில் இலவமரம் இப்போது அதிகமாகப் பயிர்செய்யப்பட்டுவருகிறது. ஜாவா தீவில் அதைத் தனிப்பயிராக சாகுபடி செய்துவருகிருர்கள். இலவம் விதைகளை ஒன்றுக்கும் உதவாதவை யென்று தள்ளிவருகிருர்கள். அதில் நூற்றுக்கு 28 பாகம் எண்ணெய் இருக்கிறதாகத் தெரிகிறது. அந்த எண்ணெய் பருத்திக்கொட்டை எண்ணெயைப் போலவே இருக்கிறதாம். அதை சமையலிலும், ஸோப் தொழிலிலும் உபயோகிக்கலாமாம். பிண்ணுக்கு மாட்டுக்குத் தீவனமாகவும் எருவாகவும் உபயோகப்படும். இலவு பயிர் செய்வதில் அதிக சிரமம் இல்லை. அது வளமைக் குறைவான நிலங்களிலும் வளரும். செடிகளை 20 அடிக்கு ஒன்ருக வைக்கவேண்டும். இரண்டாவது வருஷத்தில் காய்க்க ஆரம்பிக்கும். மூன்ருவது வருஷம் முதல் கிரமமாகப் பலன் கொடுத்துவரும். சாதாரணமாக ஒரு மரத்தில் 200 காய்கள் கிடைக்கலாம். இவைகளிலிருந்து 2½ ராத்தல் பஞ்சும் 4 ராத்தல் விதையும் கிடைக்கும். 20 அடிக்கு ஒரு மரமாக ஒரு ஏக்கரில் 108 மரம் இருக்குமாதலால், ஒரு ஏக்கருக்கு 270 ராத்தல் பஞ்சும், 432 ராத்தல் விதையும் கிடைக்கலாம். விதையிலிருந்து 108 ராத்தல் அதாவது 36 வீசை எண்ணெய் கிடைக்கும். இலவு சாகுபடிக்கு அதிக பணம் தேவையில்லையாகையால், இதர பயிர்களுக்கு உதவாத நிலங்களில் அதைப் பயிரிடுதல் நல்லது.

CHILDREN'S PAGE—பாலர் பக்கம்

CHRISTMAS GREETING

ஓர் கிறிஸ்மஸ் வாழ்த்துதல்

இந்தக் காலத்தில் யாவரும் கிறிஸ்மஸ் வாழ்த்துதல் தங்கள் இஷ்டருக்கும், பந்துக்கள் சிநேகிதருக்கும் அனுப்புவது வழக்கம். சிலர் இவ்வித வாழ்த்தை அன்பினாலும், சிலர் கடமைக்கென்றும் அனுப்புகிறதுண்டு. வெகுமதிகள், கடிதங்கள், வாழ்த்துக் கூறும் படங்கள், வேதவாக்கியங்கள் மூலமாய் கிறிஸ்மஸ் வாழ்த்து எங்கும் செல்வதைப் பார்க்கலாம். கிறிஸ்மஸ் தினத்துக்கு முந்தின இரவில் சிறுவர் தூங்கும்போது பெற்றோர், பையில் அல்லது மேல் ஜோட்டில் போட்ட ஈவுகளை கட்டிலில் தொங்கவிடுவார்கள் அல்லது தலையணைக்கடியில் வைப்பார்கள். கிறிஸ்மஸ் தினம் ஆரம்பித்தவுடன், அதாவது இரவில் 12 மணி அடித்தமாத்திரத்தில், ஒருவருக்கொருவர் கிறிஸ்மஸ் வாழ்த்துக் கூறுவதில் முந்திக்கொள்வார்கள்.

ஜப்பான் தேசத்துக் கிறிஸ்தவ வாலிபரொருவர், ஓர் கிறிஸ்மஸ் தினத்தை அதிக தியானத்தில் கழித்தார். அன்று கிறிஸ்து பரலோகத்தில் இராஜாதிராஜா கர்த்தாதிகர்த்தா வென்றழைக்கப்படும் ராஜரீக மேன்மையும், அவர் பிறப்பில் அவர் காட்டிய தாழ்மையான ஏழைக்கோலமும், சாஸ்திரிகள் இராஜாக்களும் இடையரும் அவரை வந்து பணிந்ததும், அவர் தியானமாகி, தன் இருதயத்தில் இயேசுவை இராஜாவாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற அவர் உதயமாகி, தன் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதையும் அவருக்குப் பிரதிஷ்டைசெய்து இயேசுவை இராஜாவாக உள்ளத்தில் ஏற்று மிக்க பரவசமடைந்தார். அன்றுமுதல் கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் முதன்மையாக அவர் உள்ளத்தில் இராஜாவாக வீற்றிருந்தார். சகலத்திலும் அவருக்குக் கீழ்ப்பட்டு, இயேசுவின் சித்தமே அவரில் சகலவிதத்திலும் நிறைவேறிற்று. இயேசுவை இராஜாவாக ஏற்றுக்கொண்டபின் அவர் ஜீவியத்திலுண்டான மாறுதலைச் சகலருங் கண்டார்கள். நாளுக்கு நாள் பரிசுத்த ஜீவியத்தில் வளர்ந்தார். அவர் இருதயத்தையும் ஜீவியத்தையும் ஆண்டுகொண்ட இயேசு இராஜாவே அவருக்குள் ஜீவவித்தாக இருந்ததினால், அவர் தேவனுடைய ராஜ்யத்தின் புத்திரரென்று தெளிவாய் விளங்கிற்று.

தனக்கு போன கிறிஸ்மஸ் தினத்தில் மிக்க ஆத்தும பலனை வருவித்த தியானத்தை மறு கிறிஸ்மஸ் தினத்தில் சகலருக்கும் வாழ்த்தாக எழுதித் தெரிவிக்க சித்தங்கொண்டு, அநேக நாட்களாய் ஊக்க

மாய் ஜெபித்து, பின் கார்டுகளில் 'இயேசுவை இராஜாவாக்கு' (Make Jesus King) என்ற வாக்கியத்தைத் தன் சொந்தக் கையால் எழுதி கையொப்பமிட்டு, ஜெபத்தோடு தனக்கு அறிமுகமான சகல சிநேகிதர் பந்துக்களுக்கு அனுப்பினார். ஜெபத்தோடு அனுப்பப் பட்ட இந்த வாக்கியம் அநேகருடைய ஜீவியத்தில் புதிய பெலனும் சந்தோஷமும் உண்டாக்கியது.

சிறுவரே, இயேசுவை உங்கள் இருதயத்தில் இராஜாவாக்குங்கள். இயேசு இராஜா உங்கள் இருதயத்தை அன்பாய்க் கேட்கிறார்.

LIFE IN THE FAMILY

குடும்ப ஜீவியம்

அநேக சிங்கங்களைக் கொன்ற ஒரு வேட்டைக்காரனை எண்ணிறந்த கொசுக்கள் இரவில் சூழ்ந்துகொண்டதாம். அவைகளைத் துரத்தவும் கொல்லவும் அவனால் கூடவுமில்லை, அவன் துப்பாக்கியால் கூடவுமில்லை. அநேக கிறிஸ்தவர்களுடைய குடும்பஜீவியமும் இப்படியே இருக்கிறது. சிங்கங்களைப்போன்ற பலத்த பாவ சோதனைகளை ஜெயிப்பார்கள். ஆனால் வீட்டில் நேரிடுகிற அற்பமான பல தொந்தரவுகளை ஜெயிக்க அவர்களுக்கு சக்தியில்லை. வெளியில் உள்ள யாவரோடும் அன்பும் சாந்தமுமாய்ப் பேசுவார்கள். வீட்டுக்குவந்தவுடனே, அற்பகாரணத்தையிட்டு கோபமும் மூர்க்கமும் எழும்பிவிடுகிறது; அன்பும் சாந்தமும் பறந்துவிடுகிறது. அநேக குடும்பங்களின் நிர்ப்பந்தங்களைச் சொல்லிமுடியாது. கொந்தளிக்கிற கடலுக்கொப்பாக அவைகள் இருக்கின்றன. மாம்சமாகிய கடல் மனிதருக்குள்ளிருந்து கொந்தளிக்கிறது. 'இரையாதே, அமைதலாயிரு' என்று சொல்லக்கூடிய இயேசு எஜமான் அங்கில்லாதது தான் இதற்கெல்லாம் காரணம். இயேசுவைக் கண்டபோது, ஒரு வாலிபனைப் பிடித்திருந்த சாத்தான் அதிகமாய் அவனை அலைக்கழித்தான் என்று சொல்லியிருக்கிறது. ஆம், கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிற கிறிஸ்தவர்களின் வீட்டில்தான் அலைக்கழிக்கிற பிசாசையும் அதினால் உண்டாகிற பாவ கூத்தாட்டத்தையும் அதிகமாய்ப் பார்க்கிறோம். பிசாசின் கிரியைகளை அழிக்கவந்த தேவ குமாரனே, எதுவரைக்கும் உமது சத்துரு உமது சுதந்தரத்தைப் பாழாக்குவான்?

பிரிந்திருக்கிற குடும்பம் நிலைநிற்காது. தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற குடும்பம் நிலைநிற்காமல் பாழாய்ப் போம். நமது நாடு இதற்கு உதாரணம். கிறிஸ்தவ வீரர்கள் என்

இன்னமும் இதிலிருந்து எழும்பவில்லை? குடும்ப ஜீவியம் பாழ், குடும்பத்தில் பிரிவினை. கால்கள் கட்டப்பட்டிருக்கையில் ஒரு குருவி பறக்குமோ? பரீட்சித்துப்பார். குடும்பத்தின் ஒரு அங்கம் சாத்தானால் கட்டப்பட்டிருக்கையில் மற்ற அங்கம் கிறிஸ்தவ ஜீவியத்திலும் ஊழியத்திலும் கழுகைப்போல செட்டைகளை அடித்து எழும்பக்கூடுமோ? சபைகளில் ஏன் ஆவியின் அனலில்லை, மரணம் குடிகொண்டிருக்கிறது, உற்சாகம் குன்றிப்போகிறது? குடும்ப ஜீவியத்தின் நிர்ப்பந்தத்தினாலேயே!

இங்கிலாந்தைப்பற்றிய ஒரு புஸ்தகத்தைத் திறக்கிறேன். அங்கே ஒரு மனைவி புருஷனைப்பற்றி கர்த்தரைத்துதித்து, அந்தப் புஸ்தகத்தை அவருக்குப் பிரதிஷ்டை செய்திருக்கிறாள். 'இயேசு எஜமானுடைய ஊழியத்திற்கு என்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து, பரமதரிசனத்துக்கு நான் கீழ்ப்படியும்படி என்னை உற்சாகப்படுத்தி, பெலப்படுத்திவருகிற என் அருமைக் கணவனுக்கு இந்தப் புஸ்தகத்தைப் பிரதிஷ்டைசெய்கிறேன்' என்று எழுதுகிறாள். இன்னோர் புஸ்தகத்தைத் திறக்கிறேன். அங்கே ஓர் புருஷன் தன் மனைவியைப்பற்றி இவ்விதமாய் எழுதியிருக்கிறார். தமிழ் நாட்டு ஸ்திரீகளே, அவர் எழுதியிருக்கிறதைக் கவனியுங்கள். 'தன்னுடைய சாந்தமும் நிலைவரமுமான கிறிஸ்தவ ஜீவியத்தினால், என் ஊழியத்தில் என்னை உற்சாகப்படுத்தி, என் ஊழியத்தில் நான் பெலப்படும்படிக்கு, என் வீட்டை எப்போதும் பரிசுத்த ஸ்தலம் போல் இருக்கும்படி காத்துவருகிற என் அருமை மனைவிக்கு, இந்த என்னுடைய முதலாம் புஸ்தகத்தை பிரதிஷ்டை செய்கிறேன்' என்று எழுதியிருக்கிறார். தமிழ்நாட்டில் எத்தனை மனைவிகள் தங்கள் புருஷரைக்குறித்தும், புருஷர் மனைவிகளைக்குறித்தும் இவ்வித சாட்சி சொல்லக்கூடும்! பத்துப்பேர் உண்டோ? ஆண்டவரே, தேவரீருக்கே தெரியும்! கனம் மூடி சுவிசேஷகரிடத்தில் ஒரு தேவ ஊழியன் போய், தன் மனைவி தன் ஊழியத்திற்குத் தடையாயிருக்கிறாள் என்று சொன்னாராம். அப்போது மூடி என்பவர், 'நீர் உடனே தேவ ஊழியத்தை ராஜிநாமாக்கொடுத்துப் போட்டு பயிரிடும் தொழில் செய்யப்போனால் மிகுந்த நலமாயிருக்கும்' என்று சொன்னாராம். இதே கட்டளை நமது நாட்டில் கொடுக்கப்பட்டால் எத்தனை பேர் மீந்திருப்பார்களோ, தெரியாது!

குடும்பத்தைச் சரிப்படுத்தும் முறை. (1) கர்த்தரை நோக்கி அந்தரங்கத்தில் விடாமுயற்சியாய் இடைவிடாமல் ஜெபத்தில் மன்றாடு. இவ்வகைப் பிசாசு, இயேசு சுவாமிக்குமாத்திரம் பணியும். (2) குற்றம் கண்டுபிடிக்கிறதையும் குறைகூறுகிறதையும் விட்டுவிடு.

மற்றவர்கள் சேர்ப்பயுமபடி உன்னை முதலாவது சேர்ப்படுத்து. உன்னில் இயேசு ஜீவிக்கிறதை மற்றவர்கள் காணட்டும். (3) குடும்பத்தில் உனக்கு நேரிடும் கனவீனத்தைவிட, குடும்பத்தார் இயேசுவுக்குச் செய்யும் கனவீனத்தை அதிகமாய் நினைத்துத் துக்கப்படு. முதலாவது கர்த்தராகிய இயேசுவுக்கு அவர்கள் மன வருத்தமின்றி நடக்கும்படி நாடு. அப்போதுதான் உனக்குரிய கனம் உனக்குக் கிடைக்கும். உன் ஆண்டவர் உன் வீட்டில் கனவீனப்படுத்தப்படுகையில், நீ என் கனத்தைத் தேடுகிறாய்? (4) தப்பிதமாய் நடக்கிற வீட்டாரிடத்தில் அடிக்கடி ஆவிக்குரிய சம்பாஷணை செய். புருஷனும் மனைவியும் சேர்ந்து வேதம் வாசிப்பதும், பக்திக்குரிய சம்பாஷணை செய்வதும் இந்த நாட்டில் மகா அபூர்வம்! தீமையைக் கண்டிப்பதினால் அல்ல, நன்மையின் ருசியை மென்மேலும் கொடுப்பதினாலேயே, பாவம் செய்கிறவர்களைத் திருப்பலாம். (5) அற்பமான தேர்ச்சியைக் கவனித்து, உற்சாகப்படுத்து. குடும்பத்தில் சோதனை மகா ஏராளமும், உள்ளான சத்துரு மிகவும் உறங்கொண்டவனுமாயிருப்பதால், அதைரியப்படுத்துவதைவிட, உற்சாகப்படுத்துவது மகா அவசியம். (6) இயேசுவோடு அவர்கள் அடிக்கடி அதிகமதிகமாக ஐக்கியப்படும்படி செய். ஜெயிக்கிறவர் அவர் ஒருவரே. 'அவர்கூட இருந்தால் ஜெயம். அவர் இல்லாவிட்டால் தோல்வி. ஆகையால் அதிகாலையில் யாவரையும் வேதம் வாசிக்கச்செய். இயேசுவோடு ஐக்கியப்பட்டு, ஒவ்வொரு நாளையும் ஆரம்பிக்கட்டும். கொசுவை ஜெயிக்க ஒரே ஒருவழி உண்டு—கொசுவலைக்குள் ஒளித்துக்கொள்வதே. குடும்பத்தில் நேரிடும் எண்ணிறந்த சோதனைகளின் மத்தியில் அமரிக்கையாய் இருக்கவேண்டுமானால், இயேசுவுக்குள் ஒளித்துக்கொள்ள வேண்டும். அவரால் மூடப்பட்டவர்களாய் நடந்து திரியவேண்டும். 'நீ உன் வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்து . . . என்று கர்த்தர் சொல்லுகிறார்.' (2 இராஜா. 20: 1.)

PLANTS USEFUL FOR FIBRE MAKING

நாரெடுக்க உதவும் செடிகள்

நமது நாட்டில் நார் கொடுக்கும் மரஞ்செடிகள் அதிகமாக இருக்கின்றன.

சில நார்கள், துணிகள் நெய்வதற்கு உபயோகப்படுகின்றன. சில மட்டமான நார்கள், கோணிப்பைகள் செய்ய உதவுகின்றன. வேறு சில, கயிறுகளும் வடங்களும் செய்யமாத்திரம் உபயோகப்படு

கின்றன. இங்கு சில முக்கியமான நார்ச்செடிகளைக் குறிப்பிடு கிறோம்.

கஞ்சா

கஞ்சாச் செடியை தக்கபடி பயிரிட்டால் நல்ல நார் கிடைக்கும். அதை நெருக்கமாகப் பயிரிடவேண்டும். நான்குமாசத்தில் 12 முதல் 14 அடி வரை வளர்ந்து நார் எடுக்கத்தகுந்த நிலைமையை அடைந்து விடும். கஞ்சா நார் மிகவும் உறுதியானது. கப்பல் பாய், கான் வாஸ் துணி முதலியவைகள் செய்ய அது அதிகமாய் உபயோகப்படும்.

சடம்பு

இது நிலங்களுக்குப் பசுந்தாள் எருப்போடுவதற்கேற்ற பயிராகும். இதிலிருந்து ஒரு நேர்த்தியான நார் கிடைக்கிறது. கஞ்சாவைப்போ லவே இதன் தண்டுகளையும் ஜலத்தில் ஊறப்போட்டு, அழுகவைத்து நார் எடுக்கிறார்கள். அந்நாரைக்கொண்டு கெட்டியான கான்வாஸ் துணி, ஜலம் தாக்காத துணிப்பைகள், ட்வைன் கயிறு முதலியவை கள் செய்யலாம்.

கற்றாழை

கற்றாழையிலிருந்து நார் எடுக்க மடல்களை ஜலத்தில் பத்து பன் னிரண்டு நாட்கள் ஊறப்போடவேண்டும். சோற்றுப் பாகமெல்லாம் அழுகி, விட்டுப்போகும். நார் மாத்திரம் இருக்கும். அழுகின மடல் களை வெளியில் எடுத்து கட்டையால் தட்டி, நாரைப் பிரித்து, நிழ லில் உலர்த்தவேண்டும். மடல்களை அதிக நாள் ஜலத்தில் அமிழ்த்தி வைத்திருந்தால், நார் உறுதி குறைந்துபோகும்.

ஓடும் ஜலத்தில் மடல்களைப் போட்டுவைப்பதே சிலாக்கியம். அப்போதுதான் நார் வெண்மையாய் இருக்கும். தேங்கியிருக்கும் ஜலத்தில் ஊறப்போட்டால் நார் பழுப்பு நிறமடையும். யந்த்ரங் களைக்கொண்டு நாரைப் பிரித்து எடுத்தால், நாரின் உறுதி அதிகமாக இருக்கும். கற்றாழை நார் 16 அங்குலம் முதல் 40 அங்குலம் வரை நீளம் இருக்கும். அது வடங்கள் செய்வதற்கும் ட்வைன் செய்வதற் கும் பயன்படும்.

அன்னாசி

அன்னாசி மடலில் உயர்ந்த நார் இருக்கிறது. மடல்களின் வெளிப்புறத்தைக் கூர்மையில்லாத கத்தியாலோ, கொட்டாங்கச்சி யாலோ சுறண்டினால் நார் தனியாகக் கிடைக்கும். நார் ஸன்னமாக இருக்கும். அதனால் மேஜை விரிப்புத்துணி, ஜமுக்காளம் முதலிய துணிகள் நெய்யலாம்.

வாழை

வாழைப்பட்டையிலிருந்து ஒரு நல்ல நார் எடுக்கலாம். பட் டையை உருளைகளுக்கு இடையில் கொடுத்து நசுக்கி, கூர்மையில்

லாத கத்தியால் சுறண்டி நாரெடுக்கிருர்கள். இதற்காக சில ஸுலப மான யந்த்ரங்களும் இருக்கின்றன. எடுத்த நார் ஈரமாக இருக்கும். அதை நிழலில் உலர்த்தி எடுப்பார்கள். நார் வெயில்பட்டால் ஒடிந்து போகும் தன்மையுள்ளது. அதற்குப் பின்வரும் முறையால் பதனிட வேண்டும். பத்து பட்டணம் படி ஜலத்தில், நிறையில் 100-க்கு 1-வீதம் தேங்காய் எண்ணெயும், ¼-பாகம் ஸோடாவும், ½-பாகம் அம்மோனியம் கார்பனேட்டும் சேர்த்து அந்த ஜலத்தில் 100 ராத்தல் வாழைநாரைப் போட்டு கொதிக்கவிடவேண்டும். இப்படி 2-மணி நேரம் கொதித்தபிறகு நாரை எடுத்து நிழலில் உலர்த்தவேண்டும். பிறகு அதை மெல்லிய நூலாக நூற்கலாம். இந்த நூல் மேஜைத் துணி முதலிய அலங்காரத் துணிகள் நெய்ய உபயோகப்படும்.

எருக்கு

இதன் பட்டையிலிருந்து நல்ல நார் கிடைக்கிறது. இதனுல் செய்யப்பட்ட கயிறு கதம்பைக் கயிற்றைவிட 2½ மடங்கு உறுதியுள்ளது. இதிலிருந்து வில் நாண், வடம், புலி பிடிக்கும் கண்ணி முதலியவை செய்யலாம். கடுதாசி செய்வதற்கும் உபயோகப்படும்.

ரேயில் கற்ருழை

ரெயில் கற்ருழையின் மடல்கள் ஆறடி முதல் எழடி வரை நீளமிருக்கும். மடல்களை ஊறவைத்து, மரக்கொட்டாப்புளியால் அடித்தால் மிக உறுதியான நார் கிடைக்கும். அதை வெயிலில் காயவைத்தால் வெளுப்பாகும். அதைக்கொண்டு கயிறுகளும் வடங்களும் செய்யலாம். கூடாரக் கயிறுகளும் பங்காக் கயிறுகளும் இதிலிருந்து செய்யலாம். பனை, தென்னை முதலிய மரங்களிலிருந்தும் நார் கிடைக்கிறது. இந்த நார் அன்னிய நாடுகளுக்கு அதிகம் எற்றுமதியாகிறது.

EXPORT OF FOOD GRAINS AND THE INCREASE IN PRICE

ஆகாரத்தானியங்கள் ஏற்றுமதியும் விலைபதிகமும்

அரிசியும் மற்ற ஆகாரத்தானியங்களும் சண்டைக்கு முன் ஏற்றுமதியானதைப்பார்க்கிலும் இப்பொழுது ஐரோப்பா தேசத்திற்கு அதிகமாய் ஏற்றுமதியாகிறதென்றும், அது காரணம்பற்றியே ஆகாரத் தானியங்களின் விலை அவ்வளவு அதிகமாயிருக்கிறதென்றும் அநேக ஜனங்கள் நினைக்கிருர்கள். அடியில்வரும் தொகைகளைப் பார்த்தால் அப்படி யெண்ணுவது முற்றுந் தவறு என்று விளங்கும். 1914-ளு எப்பிரல், மே, ஜூன், ஜூலை ஆகிய நாலு (4) மாதங்களிலும்

65,629 டன் அரிசி, ஆகாரத்தானியங்கள், பருப்பு வகையராக்கள் சென்னையிலிருந்து கடல்மார்க்கமாய் ஏற்றுமதியாயிற்று. இந்த வருஷம் அதே நாலு மாதங்களில் அந்தத் தானியங்கள் 2,046 டன் கள்தான் சென்னையிலிருந்து கடல்மார்க்கமாய் ஏற்றுமதியாயிற்று. 1914-ஞ் ஏப்பிரல், மே, ஜூன், ஜூலை மாதங்களில், இந்தியா முழுவதுமிருந்து கடல்மார்க்கமாய் ஏற்றுமதியான இந்தச் சரக்கு களின் மொத்தம் 11,91,303 டன்கள். இந்த வருஷம் அதே நாலு மாதங்களில், இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாய் ஏற்றுமதியான சரக்குகள் 2,19,072 டன்கள்தான். இதில் பெரும்பாகம் பர்மா தேசத்திலிருந்து அனுப்பப்பட்டது; அதுவும், அநேக இந்தியர்கள் இருக்கிற இலங்கையைப்போன்ற தேசங்களுக்கு அவர்கள் சாப் பாட்டிற்காக அனுப்பப்பட்டது. இப்பொழுது இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் ஆகாரத்தானியங்கள், சண்டைக்கு முன் அனுப்பப் பட்டதைவிட அதிகம் என்று சொல்லுவது பிசகு என்று இதினால் நன்றாய்த் தெரிகிறது. அல்லாமலும் இப்பொழுது மிகவும் குறைவா யிருக்கிறது. இதுவுமன்றி, ஆஸ்திரேலியா தேசத்திலிருந்து, ஏராள மான **கோதுமை**யை வரவழைப்பதற்கு இராஜாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மேலும், பர்மா அரிசியை ஏராளமாய் சென்னை இராஜதானிக்கு கொண்டுவரும்படியும் சர்க்காரார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சண்டைக்கு முன்னே, பர்மா அரிசி சென்னைக்குக் கொஞ்சந்தான் வந்தது. 1913-ஞ் ஏப்பிரல், மே, ஜூன், ஜூலை ஆகிய நாலு மாதங்களில் 37,659 டன்கள்தான் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டது. 1919-ஞ் அதே நாலு மாதங்களில் 1,50,573 டன்கள், அதாவது ஏறக்குறைய ஐந்து மடங்கு அதிகமாய் இறக்குமதியாயிற்று. இதினால் இந்த வருஷம் ஆகாரத் தானியங்களின் விலை அதிகப்பட்டதற்கு காரணம் ஆகாரத்தானி யங்களை ஏற்றுமதி செய்வதனால் அல்ல என்பது தெரிகிறது. அதற்கு முக்கியமான இரண்டு காரணங்களாவன:—(1) ரூபாய்களையும், கடுதாசி நாணயங்களையும் ஏராளமாய் இந்தியாவில் வெளியிட் டிருப்பதும், (2) சென்ற வருஷம் சரியாக தானியம் விளையாததும் தான். ஒரு தேசத்தில் அதிக பணமும் குறைந்த ஆகாரத்தானியங் களும் இருந்தால் இயற்கையாகவே ஆகாரத்தின் விலை அதிகப்படும்.

(1) இந்தியாவில் பணத்தோகை அதிகமானது

1918-ஞ் ஜனவரி௴ 1௳ முதல் 130 கோடி ரூபாய்களுக்குக் குறையாமல் நாணயமாக்கப்பட்டது. 86 கோடி ரூபாய்க்குக் குறை யாமல் காகித நாணயங்கள் வெளியிடப்பட்டது. ஏனென்றால் இந்தியாவிற்கு முன் வருஷங்களைப்போல அவ்வளவு அதிகமாய்

382

அன்னியதேசத்துச் சரக்குகள் வரவில்லை. மற்ற தேசத்தார்கள் இந்திய சரக்குகளுக்குப் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டுவந்தார்கள். இதனுல் தான் இந்தியாவில் முன்பு இருந்ததைவிட இப்பொழுது அதிக பணம் இருக்கிறது.

(2) சென்ற வருஷம் நன்றுய் விளையாமல்போனது.

சென்ற வருஷம் இந்தியா முழுவதும் நல்ல மழை பெய்யவில்லையென்றும் அதனுல் விளைவு பெரும்பாகம் குறைந்துபோய்விட்டது என்றும் எல்லாருக்கும் நன்ருய்த் தெரிந்த விஷயம். ஆகவே இத்தேசத்தில் ஆகாரத்தானியங்கள் போதுமானவைகள் இல்லை. பணம் வைத்திருக்கும் ஜனங்கள் இருக்கும் தானியத்திற்கு அதிகப்பணம் கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிருர்கள். முன்பு இருந்ததைவிட இப்பொழுது ஜனங்களிடத்தில் அதிகப் பணம் இருக்கிறபடியால் முன்னே இருந்ததைவிட இப்பொழுது விலையும் அதிகமாய்விட்டது.

புது ரூபாய்களும், காகித நாணயங்களும் இந்த தேசத்தில் இருப்பதால் சண்டைக்கு முன்பு இருந்ததைப்போல் அவ்வளவு குறைவாய் விலைகள் குறையும் என்பதற்கு ஏதுவில்லை. ஆனுல் இந்த வருஷம் நல்லவேளையாய் மழை நன்ருய் பெய்திருக்கிறது. விளைவும் நன்ருய் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால் சீக்கிரமாய் ஆகாரத்தானியங்கள் ஏராளமாய் கிடைக்கும் என்றும் அதனுல் விலையும் குறையும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

LESSONS FOR FAMILY WORSHIP

160959

வேத வாசிப்பு ஒழுங்கு

1919-ஆம் டிசெம்பர்மீ

1	தி.	வெளி.	1.	1— 8	11	வி.	வெளி.	19.	5—16	21	ஞா.	சங்.	144.	1—15
2	செ.	,,	1.	9—20	12	வெ.	,,	20.	1—15	22	தி.	ஆகாய்.	1.	1—15
3	பு.	,,	2.	1—17	13	ச.	,,	21.	1—14	23	செ.	,,	2.	1— 9
4	வி.	,,	2.	18—29	14	ஞா.	,,	21.	15—27	24	பு.	,,	2.	10—23
5	வெ.	,,	3.	1—13	15	தி.	,,	22.	1— 9	25	வி.	சங்.	72.	1—20
6	ச.	,,	3.	14—22	16	செ.	,,	22.	10—21	26	வெ.	,,	145.	1—21
7	ஞா.	,,	4.	1—11	17	பு.	சங்.	140.	1—13	27	ச.	,,	146.	1—10
8	தி.	,,	5.	1—14	18	வி.	,,	141.	1—10	28	ஞா.	,,	147.	1—20
9	செ.	,,	6.	1—17	19	வெ.	,,	142.	1— 7	29	தி.	,,	148.	1—14
10	பு.	,,	7.	9—17	20	ச.	,,	143.	1—12	30	செ.	,,	149.	1— 9
										31	பு.	,,	150.	1— 6

C. L. S. PRESS, MADRAS—1919